Name of the Newspaper: Dinamani Date: 20-5-18

# சின்னமலை - டிஎம்எஸ் இடையே மெட்ரோ ரயிலை இயக்கி ஆய்வு





சென்னை சின்னமலை – டிஎம்எஸ் இடையிலான மெட்ரோ ரயில் சுரங்கப் பாதை பணி நிறைவடைந்ததையொட்டி சனிக்கிழமை மெட்ரோ ரயிலை இயக்கி சோதனையில் ஈடுபட்ட ரயில்வே பாதுகாப்பு ஆணையர் (தெற்கு) ஏ.கே.மனோகரன் தலைமையிலான குழு. உடன் மெட்ரோ ரயில் நிறுவனத்தின் பொதுமேலாளர் (சுரங்கம்) வி.கே.சிங், திட்ட இயக்குநர் திரிபாதி உள்ளிட்டோர்.

சென்னை, மே 19: சென்னை சின்னமலை - டிஎம்எஸ் இடையே 80 கி.மீ வேகத்தில் மெட்ரோ ரயிலை இயக்கி சனிக்கிழமை சோதனை செய்யப்பட்டது.

சென்னை அண்ணா சாலையில் சின்னமலை - டிஎம்எஸ் இடையிலான சுரங்கப் பாதையில் மெட்ரோ ரயில் பணிகள் முடிக்கப்பட்டதை அடுத்து கடந்த இரு மாதங்களாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இப்பாதையில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் (தெற்கு) ஏ.கே.மனோகரன் தலைமையில் 6 பேர் கொண்ட குழு மற்றும் மெட்ரோ ரயில் அதிகாரிகள் வெள்ளி, சனிக்கிழமைகளில் ஆய்வு மேற்கொண்டனர்.

முதல் நாளில் ரயில் பாதையின் தரம், சிக்னல் செயல்பாடு, ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 2-ஆவது நாளான சனிக்கிழமை 80 கி.மீ வேகத்தில் ரயிலை இயக்கி சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வை அடுத்து ரயில்களை இயக்குவதற்கான ஒப்புதல் விரைவில் கிடைத்துவிடும். அதனால் இம்மாத இறுதிக்குள் நேரு பூங்கா-சென்ட்ரல் ரயில் நிலையம், சின்னமலை--டிஎம்எஸ் (தேனாம்பேட்டை) இடையே மெட்ரோ ரயில்கள் இயக்குவதற்கு வாய்ப்புள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வின்போது மெட்ரோ ரயில் நிறுவன பொது மேலாளர் (சுரங்கம்) வி.கே.சிங், திட்ட இயக்குநர் திரிபாதி உள்ளிட்டோர் பாதுகாப்பு ஆணையர் மனோகரனுடன் இருந்தனர்.